பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 08 புதன்கிழமை 24.08.2022 கதிர் 291

**இது ரகசியம் அல்ல!**

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் யார் யாருக்கு எதிராக, எவ்வெப்போது பாயப் போகின்றதோ தெரியவில்லை. அப்படித்தான் நிலைமை.

கோட்டா அரசைக் கவிழ்ப்பதற்காக முன்னர் நடைபெற்ற பல்கலை மாணவர்களின் ☞2

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு பதிலாக ‘தேசிய பாதுகாப்புச் சட்டம்’

## வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை



பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய வெகுவிரைவில் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டமாகும். இதில் பரந்தளவிலான ☞11



## புலம்பெயர் தமிழர்களின் உதவி கிடைக்க

# நம்பகத்தன்மையை அரசு வெளிப்படுத்த வேண்டும்

### முன்னாள் எம்.பி. சுரேஷ் வலியுறுத்து

புலம்பெயர் உறவுகள் மீதான தடையை ஒரு அரசு விலக்குவதும் மற்றொரு அரசு மீண்டும் தடைவிதிப்பதும் வழக்கமான ஒன்றாகி விட்டது. தமிழ்த் தேசிய இனத்தை ஒடுக்கும் நோக்கில் தேசிய இனப்பிரச்சினையை உருவாக்கிவிட்ட தென்னிலங்கை அரசியல்வாதிகளினாலேயே ஏராளமான தமிழர்கள் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, புலம்பெயர் உறவுகளின் உதவிகளை இலங்கை அரசு பெற விரும்பினால் தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை முன்வைப்பதுடன் தனது நம்பகத்தன்மையையும் வெளிப்படுத்த வேண்டும்.

— இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணயின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார். ☞11



## ரணிலைச் சந்தித்த பொலிஸ்மா அதிபர்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவுக்கும் இடையிலான சந்திப்பு ☞11

## இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிப்பு

அத்தியாவசியப் பொருள்கள் அல்லாத 367 பொருள்களின் இறக்குமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த முடிவு நேற்று முதல் மறு அறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும் ☞11

## புரட்சியை ஏற்படுத்தியவர்களை வேட்டையாடி வருகின்றது அரசு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சீற்றம்



இந்நாட்டின் இளம்தலைமுறையினர் பாரிய புரட்சியை முன்னெடுத்தனர். அதன் விளைவாகவே நாட்டை அதலபாதாளத்தில் தள்ளிய கோட்டாபய ☞11

## கோட்டாபய கடற்படை முகாமுக்கு என காணி அளவிடும் முயற்சி மீளவும் தடுப்பு!

முல்லைத்தீவு - வட்டுவாகல் கோட் டாபய கடற்படை முகாம் அமைந்த பகுதியிலுள்ள தமிழ் மக்களின் 617ஏக்கர் காணிகளை அளவீடு செய்து, கடற்படையினர் அபகரிக்க எடுத்த முயற்சி நேற்று மீண்டும் காணி உரிமையாளர்களதும் மக்கள் பிரதிநிதிகளதும் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளை அளவீடு செய்து அபகரிக்க எடுத்த முயற்சிகளுக்கு எதிர்ப்புத் ☞11



## மாணவன் காலில் போட்டிருந்த காலணிக்குள் பாம்புக் குட்டி!

கொழும்பின் பிரபல பாடசாலையில் கல்வி கற்கும் 13 வயது மாணவன் ஒருவன் அணிந்திருந்த காலணிக்குள் சின்னஞ்சிறு பாம்புக் குட்டி இருந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்றுக் காலை பாடசாலைக்கு மாணவன் பஸ்ஸில் வந்து கொண்டிருந்த போது தனது ☞11

## 12 அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் நேற்று முதல் 12 அத்தியாவசியப் பொருள்களுக்கான விலையைக் குறைத்துள்ளது.

அதற்கமைய, இறக்குமதி செய்யப்படும் பொன்னி சம்பா அரசி ஒரு கிலோ 31 ரூபா குறைக்கப்பட்டு 194 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோ பருப்பு 120 ரூபா குறைக்கப்பட்டு 460 ரூபாவுக்கும், ஒரு கிலோ நெத்தலி 25 ரூபா குறைக்கப்பட்டு 1,375 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோ பெரிய வெங்காயம் 40 ரூபா குறைக்கப்பட்டு 180 ரூபாவுக்கும், ஒரு கிலோ ☞11

## ரூ.50 கோடி கடல் அட்டை இராமஸ்வரத்தில் சிக்கியது

### இலங்கைக்குக் கடத்தப்பட இருந்ததாம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.24

இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்த முற்பட்ட இந்தியப் ☞11

## அரசியல் ஸ்திரத்தன்மை இல்லையேல் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரமாட்டர்

### ஜே.வி.பி. உறுப்பினர் லால்காந்த சுட்டிக்காட்டு



போராட்டக்காரர்களைக் கைதுசெய்து சமூகத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியாது. சமூகத்தில் ஸ்திரத்தன்மை இல்லாவிட்டால் அரசியல், பொருளாதாரத்திலும் ஸ்திரத்தன்மை ஏற்படாது. அப்படியாயின் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இங்கு வரப்போவதில்லை.

- இவ்வாறு ஜே.வி.பியின் மத்திய செயற்குழு உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்தார். ☞11

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம், காலி முகத்திடல் 'அறகலைய' போன்றவை 'பயங்கரவாத' சம்பவங்களாக சித்திரிக்கப்படும் என்றால் –

அவை பயங்கரவாதச் செயல்களா என்பதை அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்து வைத்து, விசாரித்துத்தான் கண்டறிய முடியும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வியாக்கியானம்தான் அரசின் நிலைப்பாடு என்றால் –

நாட்டின் பல பிரமுகர்கள் மீதும் இந்தச் சட்டம் இலகுவாக பாய முடியும் என்பதுதான் நிலைமை.

அந்தப் போராட்டக்காரர்களின் கூட்டங்களில் பங்குபற்றி, அவர்களைத் தூண்டியவர்களும் கூட இதே சட்டத்தின் கீழ் கையாளப்படுவர் என்றால் நம் எதிரணி அரசியல் தலைவர்கள் பலரின் நிலைமையும் அதோகதிதான்.

இந்தப் போராட்டத்தின் தொடர் நடவடிக்கையின் ஒரு கட்டமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடும் கூட எரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவின் சகோதரி துலாஞ்சலி பொலிஸாரால் அழைக்கப்பட்டு அவரின் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

ரணிலின் வீடு எரிக்கப்படுவதற்கு முன்னர் சபாநாயகரின் தலைமையில் நடைபெற்ற கட்சி தலைவர்களின் கூட்டத்தில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்று ஒரு முடிவு பரிந்துரையாக எட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் அந்த முடிவை ஏற்க மறுத்தார் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. கூட்டத்தில் இருந்தபடியே ரணிலின் அந்த முடிவு குறித்து டுவிட் செய்தி மூலம் உலகுக்குத் தகவல் அறிவித்தார் மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம். அந்த ட்விட்டை வழிமொழியும் செய்தியை சுமந்திரனும் வெளியிட்டார்.

இந்த ட்விட் செய்திகளை கொழும்புத் தொலைக்காட்சி ஊடகம் ஒன்று திரும்பத் திரும்ப ஒளிபரப்பியது. அதனால் கிளம்பிய சூட்டினால்தான் தமது வீடு எரிக்கப்பட்டது என்ற சீற்றத்தில் அச்சமயம் ரணில் இருந்தார்.

இப்போது ஹக்கீமின் வீட்டுக்குச் சென்று பொலிஸார் அவரிடம் இவ்விடயம் குறித்து வாக்குமூலம் பெற்றுருக்கின்றனர் என்று தெரிகின்றது. சுமந்திரனிடம் இன்னும் பொலிஸார் வரவில்லை. கடந்த பத்து நாள்களாக சுமந்திரன் கொழும்பில் இல்லை. ஒரு வாரம் அவர் ஜேர்மன், நோர்வே, டென்மார்க், பிரிட்டன் போன்ற நாடுகளுக்குச் சென்றிருந்தார். அங்கிருந்து திரும்பிய கையோடு நேரே யாழ்ப்பாணம் வந்துவிட்டார். நேற்று மன்னாரில் நின்றார். இன்றே கொழும்பு திரும்புகின்றார் எனத் தெரிகின்றது.

இனித்தான் அவரிடம் வாக்குமூலம் பெறப் பொலிஸார் செல்வார்களோ தெரியவில்லை.

சில சமயம் அவர் ஜனாதிபதி சட்டத்தரணி என்பதாலோ –

அல்லது, இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னர் வரைத் தாம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது 'எதிர்க்கட்சியினரின் சட்டமா அதிபர்' என்று சுமந்திரனைத் தாம் அழைத்து கௌரவித்திருந்தமையால் அவரிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற வேண்டியதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வழிகாட்டுதல் வழங்கியிருந்தமையாலோ –

அவரிடம் வாக்குமூலம் பெறும் நோக்கம் பொலிஸாருக்கு இல்லையோ தெரியவில்லை.

நேற்று முன்தினம் திங்கட்கிழமைக்கு முன்னர், அதற்கு முந்திய வாரம் திங்கட்கிழமையன்று, அமைச்சரவை கூட்டம் நடந்து முடிந்த பின்னர், அச்சமயம் ஜேர்மனியில் நின்ற சுமந்திரனோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே கொழும்பிலிருந்து தொடர்பு கொண்டு தொலைபேசியில் பேசினார் என்றும் –

அச்சமயம் சுமந்திரனுக்குப் பக்கத்தில் இருந்த உலகத் தமிழர் பேரவை பிரதிநிதி சுரேன் சுரேந்தனுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'ஹலோ' சொன்னார் என்றும் – அறிய வந்தது. சுமந்திரன் அரசி யல் ரீதியாக ஜனாதிபதி ரணிலைப் 'போட்டுப் பிடித்தாலும்' இருவருக்கும் இடையே ஒரு 'கெமிஸ்ட்ரி' இன்னமும் சுமுகமாக வேலை செய்வதாகவே தெரிகிறது.

அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா...!

**- மின்னல் -**








# இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சீனாவுக்கு இடமளியாதீர்!

**இலங்கை இறைமையுள்ள நாடுதான். தமிழர் தேசத்தையும் சேர்த்து அது ஆக்கிரமித்து நிற்கின்றது என்று தமிழர்கள் வெஞ்சினம் கொண்டாலும், இன்றைய இலங்கைத் தீவு முழுவதும் ஒரு நாடாகவே கட்டியாளப்படுகின்றது என்பதுதான் யதார்த்தம்.**

**இறைமையுள்ள நாடு என்ற அடிப்படையில், சர்வதேச நல்லுறவுக் கொள்கைகளையும் ஊடாட்டங்களையும், சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் முன்னெடுக்க இலங்கைக்கு உரிமை உண்டு என்பது மறுக்க முடியாத நியாயம் தான்.**

**அதற்காகக் களயதார்த்தங்களைப் புறந்தள்ளி, பிராந்திய ஸ்திர நிலைமைகளைப் புரிந்து கொள்ளாமல், தன்னிச்சையாக அனைத்துத் தீர்மானங்களையும் இலங்கை எடுக்க முடியாது; எடுக்கக் கூடாது.**

**சரியோ, பிழையோ புவியியல் ரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையத்தில் இலங்கை உள்ளது. பக்கத்தில் இந்திய உபகண்ட தேசம்.**

**உலகில் அதிக ஜனத்தொகை மிக்க ஜனநாயக நாடான இந்தியா, அதன் தென்முனைக் கோடியில் இந்தணூண்டு அளவிலிருக்கும் இலங்கையின் தனித்துவம், இறைமை, சுயாதிபத்தியம் போன்றவற்றை முழு அளவில் மதிக்கும் நல்ல அயல் தேசமாக விளங்குகிறது.**

**இரண்டு நாட்டு மக்களும் தொப்புள் கொடி உறவு போன்றவர்கள். இலங்கையுடன் மதிப்பார்ந்த நல்லுறவையே இந்தியா பேணி வருகிறது.**

**இப்போதைய மோசமான பொருளாதார நெருக்கடியால் இலங்கை துவண்ட போது கூட, அதைத் தூக்கி நிறுத்த விரைந்து வந்தது இந்தியாதான். 'உடுக்கை இழந்தவன் கை போல இடுக்கண் களைய' விரைந்து வந்த மூத்த சோதரன் பாரதம்தான்.**

**அந்த பாரதத்துக்கு இந்தப் பிராந்தியத்தில் பல பாதுகாப்புப்பிரச்சினைகள், கரிசனைகள் உள்ளன. வல்லரசுகளுக்கு நிகராக வளர்ந்து நிற்கும் பாரத உபகண்டம் சர்வதேச சவாலுக்கு முகம் கொடுக்கும் பல்வேறு சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டியிருப்பது தவிர்க்க முடியாததுதான்.**

**அத்தகைய சிக்கல்கள் தொடர்பில் சிறிய, அற்ப அயல் நாடான இலங்கை பாரதத்துக்கு பெருமளவில் உதவக் கூடிய வல்லமையில் இல்லாமல் இருக்கலாம். இலங்கையினால் உதவ முடியாமலும் இருக்கலாம். அது தவறல்ல. ஆனால் பாரதத்துக்கு உபத்திரவமாக மாறுவது பெரும் தவறு. கள யதார்த்தத்தைப் புரியாத வரலாற்றுப் பிழையாகி விடும் அது.**

**இந்தோ – சீனா நெருக்கடிகள் எல்லோருக்கும் தெரிந்தவை. சீனாவின் வல்லாதிக்க விஸ்தரிப்புக்கு எதிராக தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இந்தியா உள்ளது.**

**இந்தியாவைப் பாதுகாப்பு நெருக்கடிக்குள் சிக்க வைக்கும் மார்க்கமாக அதன் அயல் தேசமான இலங்கையில் வலுவாகக் காலூன்ற சீன முயல்கின்றது என்பதும் ஊரறிந்த இரகசியம்.**

**அதற்கு, அரசியல் குளறுபடித்தனம் மிக்க கொழும்பு துணை போனாலும், தமிழர் தாயகம் எக்காரணம் கொண்டும் துணை போய் விடக்கூடாது.**

**இந்தியாவுக்கு மிக நெருக்கமாக இலங்கைப் பக்கத்தில் இருப்பது தமிழர் தாயகமான வடக்கும், கிழக்கும்தான. இந்தத் தமிழர் தாயகத்தில் சீனத் தரப்பு கால் ஊன்ற எந்த இடத்தில், எந்த வடிவத்தில் வந்தாலும் நாம் இடமளிப்பது வரலாற்றுத் தவறாகிவிடும்.**

**மீண்டும் சீன தரப்புக்கள் வடக்கில் காலூன்ற எத்தனிக்கின்றன என்ற செய்தி நாரசமாய் வந்து காதில் விழுகின்றது. வடக்கே சீன தரப்புக்கு வெற்றிலை வைக்கும் தரப்புகள் தம்மை உடனடியாகத் திருத்திக் கொள்ள வேண்டும்.**

**அப்படி சீனரை வரவேற்பது சீன நட்புறவு போக்கல்ல. அது இந்திய விரோதப் போக்கு. அதற்கு தமிழர் பக்கத்தில் இடமளிக்கப்படவே கூடாது.**

# அமைச்சரவை நியமனங்களில் மொட்டுக்கு உரிய இடம் தேவை!

## சாகர வலியுறுத்து



புதிய அமைச்சரவை நியமனத்தின் போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு உரிய இடம் அவசியமாகும் என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப் பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு உரித்தான அமைச்சு பதவிகள் உரிய வகையில் கிடைக்கப்பெற வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் நேரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் அதிகளவு உறுப்பினர்களைக் கொண்ட அதாவது பெரும்பான்மை பலம் கொண்ட ஒரே கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. எனவே, இது தொடர்பில் ஜனாதிபதி உரிய கவனம் செலுத்துவார் என்று நம்புகின்றேன். – எனக் கூறியுள்ளார்.

# நாட்டுக்கு எதிரான சூழ்ச்சிகள் கம்மன்பிலவிடம் சாட்சியங்கள்!




மே 9 ஆம் திகதி முதல் ஜுலை 12 ஆம் திகதி வரை நாட்டுக்குள் நடந்த வன்முறைகள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக உடனடியாக ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதிஆணைக்குழுநியமிக்கப்படுமாயின் வன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் தொடர்பில் சாட்சியங்களுடன் தகவல்களை வழங்கத் தயார்.

வன்முறைகள் ஏற்படக் காரணம், அவற்றின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதைக் கண்டறிய உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு நாங்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்கு கொண்டுசெல்லும் சூழ்ச்சிகளை நாட்டுக்குள், நாட்டுக்கு வெளியிலும் உள்ள சக்திகள் மாத்திரமன்றி, அரசாங்கத்துக்கு உள்ளேயும் அப்படியான சக்திகளும் மேற்கொண்டன என்பது மிகவும் தெளிவானது.

ஊழல், மோசடிகள், கவனமின்மை மற்றும் வேண்டும் என்றே எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்பன மக்கள் தற்போது எதிர்நோக்கும் கஷ்டங்களுக்குக் காரணம்.

ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டால், தவறான முடிவுகளை எடுத்து நாட்டை இந்த நிலைமைக்குத் தள்ளியவர்கள், கவனமின்றி தவறான முடிவுகளை எடுத்தவர்கள் யார் என்பதை சாட்சியங்களுடன் வெளியிடத் தயாராக இருக்கின்றேன் எனவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி மாளிகைக்குள் நீச்சல் குளத்தில் குளித்த இருவர் அடையாளம் காணப்பட்டனர்!

போராட்டக்காரர்களால் ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்ட போது, நீச்சல் குளத்தில் இறங்கி சோப்பு கலந்த நீரில் குளித்த இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சோப்பு போட்டு குளித்த ஒருவர் பதுளை பகுதியில் உள்ள தொலைதூர கிராமத்தில் வசிக்கும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், மற்றைய சந்தேக நபர் தலவாக்கலை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் மேற்படி இருவரையும் கைது செய்ய விசேட பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



நீச்சல் தடாகத்தில் குதித்து நீரில் குளித்த காட்சிகள் சர்வதேச ஊடகங்களில் வெளியானதால் இலங்கை சர்வதேச அளவில் அவமானமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு செயலாளர் கமல்குணரத்ன அண்மையில் குறிப்பிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகமாக ரஜித் கீர்த்தி தென்னகோன் நியமனம்



ஜனாதிபதியின் சமூக விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகமாக ரஜித் கீர்த்தி தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்படி விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களின் முன்னாள் ஆளுநரான ரஜித் கீர்த்தி தென்னகோன், சிவில் அமைப்புகள், மனித உரிமைகள், தேர்தல் கண்காணிப்பு உள்ளிட்ட பல துறைகளில் பணியாற்றியுள்ளார்.

சமூக விவகாரங்கள், பொருளாதார மறுமலர்ச்சி என்பன தொடர்பில் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் இவருக்கு அனுபவம் உள்ளது.

மேலும் இவர் வெகுஜன தொடர்பு முதுகலைப் பட்டதாரியாவார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# கோதுமை மாவுக்கு நாட்டில் தட்டுப்பாடு!



நாட்டில் கோதுமை மாவுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், பேக்கரி தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

பேக்கரிப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக தமக்கு அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உலகில் அதிக உணவு விலை பணவீக்கம் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை!

உலகில் அதிக உணவு விலை பணவீக்கம் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை ஐந்தாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

உலக வங்கி வெளியிட்டுள்ள அண்மைய தரவு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனான், சிம்பாப்வே, வெனிசுலா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாக இலங்கை உள்ளதாக உலக வங்கி மேற்கொண்ட அண்மைய ஆய்வில் தெரியவந்துள்ளது.


# கடற்படை மற்றும் விமானப் படைகளுக்கு எரிபொருள் வழங்க இந்தியாவுடன் இணைந்தது ஆஸ்திரேலியா!

இலங்கையின் கடற்படை மற்றும் விமானபடைக்குளரிபொருள்வழங்குவதற்கு, இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதாக இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் பால் ஸ்டீபன்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடற்படை மற்றும் விமா னப்படைக்கு எரிபொருளை வழங்குவதற்கு இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவதில் ஆஸ்திரேலியா மகிழ்ச்சியடைகிறது.

இது நாடு கடந்த குற்றங்களுக்கு எதிரான நீண்டகால ஒத்துழைப்பு தொடர உதவும். அத்துடன் இந்திய பெருங்கடல் பகுதியில் அண்டை நாடுகளாக, பிராந்திய பாதுகாப்பை பாதுகாப்பதில் மூன்று நாடுகளும் உறுதிப்பாட்டை பகிர்ந்து கொள்கின்றன என்று கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

# தேசபந்து தென்னகோனை தாக்கிய 8 பேருக்கு பிணை!



மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை தாக்கிய சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 8 பேருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவர்களை தலா ஐந்து லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கோட்டை நீதிவான் உத்தரவிட்டார்.

ஜனாதிபதி சட்டத்தரணி யு. ஆர். டி சில்வா உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.





# யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய சங்காபிஷேகம் நேற்று சிறப்புற நடந்தது!

## சமயத் தலைவர்கள் உருவச் சிலைகளும் திரைநீக்கம்













யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மண்டலாபிகே பூர்த்தி சங்காபிஷேகமும், சமயத் தலைவர்களான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன் ஆகியோரின் உருவச் சிலைகள் திறப்பும் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றது.

ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷே கம் நேற்று காலை 6 மணியளவில் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து பரமேஸ்வரன் ஆலய வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள சமயத் தலைவர்களான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன் ஆகியோரின் உருவச் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் உருவச் சிலையை சிவஸ்ரீ கெங்காதரக் குருக்கள் திரைநீக்கம் செய்து, தீபாராதனை காட்டித் திறந்து வைக்க யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

கொடை வள்ளலார் சேர். பொன். இராமநாதனின் உருவச்சிலையை பரமேஸ்வரன் ஆலயப் பிரதம குருக்கள் திரை நீக்கம் செய்து, தீபாராதனை காட்டித் திறந்து வைக்க சேர். பொன். இராமநாதனின் வழித் தோன்றலான இ. தியாகராஜா மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள வேதாகமப் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக நுண்கலைக் கழக மாணவிகளின்நிருத்தியாஞ்சலியும்இடம்பெற்றது.

# பயங்கரவாத சட்டத்தை பயன்படுத்தினால் நாடு பாரிய சிக்கல்களை எதிர்நோக்கும்!

## ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாடு தேசிய ரீதியில் மட்டுமின்றி சர்வதேச ரீதியிலும் பாரிய சிக்கலான இடத்தை நோக்கி தள்ளப்படும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் ஜனநாயகம் மாத்திரமல்லாது மனித உரிமைகள் எவையும் இருக்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு நான் சில திருத்தங்களை முன்வைத்தேன். முழு சட்டமூலமும் மீளாய்வு செய்யப்படும் வரை சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அவசரப்பட வேண்டாம்.

அடுத்த இரண்டு வாரங்களில் ஜெனிவாவில் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாக உள்ளது. செப்டெம்பர் 12 ஆம் திகதி இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச்சுக்கு தயாராகி வருகிறது.

ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை எமது நாட்டின் ஏற்றுமதிக்கு நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால், இந்த அனைத்து துறைகளும் பாதிப்புக்கு உள்ளாகும்.

இந்த சட்டத்தை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். அதேபோல் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் யோசனையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்தது.

அதற்கு ஆதரவளிப்பதில்லை என நாங்கள் தீர்மானித்தோம். அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் எந்த தேவையும் இருக்கவில்லை. இதனை விட மோசமான சட்டமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தயாராகி வருகின்றனர்.

வசந்த முதலிகே என்ற மாணவனை 90 நாள் தடுப்புக் காவலில் வைப்பதற்கான உத்தரவை பெற்றுக் கொண்டனர். இதில் இருக்கும் பயங்கரவாதம் என்ன?. அதில் பயங்கரவாதம் இருப்பதாக நாங்கள் காணவில்லை எனவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.



# முன்னாள் எம்.பி. வீட்டில் திருட்டு!




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நூர்தீன் மசூரின் வீட்டை உடைத்து திருடினர் என்ற சந்தேகத்தில் 5 பேர் புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதி அமைச்சருமான நூர்தீன் மசூரின் வீட்டில் திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

புத்தளம் நாகவில்லு பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டை, கடந்த 2 ஆம் திகதி உடைத்து ஒரு கோடியே 60 லட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய தங்கம், பணம் மற்றும் ஏனைய பொருள்கள் திருடப்பட்டன.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் 5 பேர் புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது திருட்டு சந்தேகநபர்களிடமிருந்து அரைவாசி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவத்தில் மேலும் 2 பேர் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் எனவும் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்பாடு இலங்கைக்குப் பிரித்தானியா கண்டனம்!

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவது மனித உரிமைகளுக்கு முரணானது என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தனது ருவிட்டர் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, ஹாந்த குணதிலக்க மற்றும் கல்வல சிறிதம்ம தேரர் ஆகியோரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதி கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி அனைத்து பல்லைக்கழக மாணவர் ஒன்றியம் கொழும்பில் நடத்திய எதிர்ப்பு நடவடிக்கையின் போது வசந்த முதலிகே உள்ளிட்ட 19 பேர் கைது செய்யப்பட்டனர்.

பாதுகாப்பு அமைச்சரின் அனுமதிக்கு கிடைத்துள்ளதால் அவர்கள் 90 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். எவ்வாறாயினும், பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டமைக்கு எதிராக பல்வேறு தரப்பினர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்காத சட்டங்களைப் பயன்படுத்துவது இலங்கையில் ஜனநாயகத்தை சிதைக்கிறது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை நிலைநிறுத்துவதற்கு நாங்கள் அரசாங்கத்தை ஊக்குவிக்கிறோம் என்று அவர் தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அண்மைக்காலமாக கைது செய்யப்பட்டவர்களில் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டதாக வெளியான செய்திகள் குறித்து கவலையடைவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் இலங்கை அலுவலகம் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள ருவிட்டர் செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட மாட்டாது என அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய தகவலை நினைவு கூருவதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடற்படைச் சிப்பாய் யாழில் தற்கொலை!

காங்கேசன்துறை கடற்படை முகாமில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

23 வயதுடைய கேகாலையை சேர்ந்த டி.பி.என்.டி. பெரேரா எனும் கடற்படை சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

மேற்படி சிப்பாய் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை தனது துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தனது உயிரை மாய்த்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# 2027 இல் தமிழர் ஒருவரே இலங்கையின் பிரதமர்!

## இந்திய ஜோதிடரின் கணிப்பு

இலங்கையில் எதிர்வரும் 2027 ஆம் ஆண்டுக்குள் தமிழர் ஒருவர் பிரதமராகலாம் அல்லது ஜனாதிபதி ஆகலாம் என்ற காலகட்டம் வரப் போகின்றது என பிரபல எண்கணித ஜோதிடர் செல்வன் தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கையின் அரசமைப்பு திருத்தி எழுதப்படும் என்பது என்னுடைய கணிப்பு, கண்டிப்பாக அது நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள பௌத்தர் ஒருவர்தான் இலங்கையின் ஜனாதிபதியாக ஆகலாம் என்ற வரலாறு நிச்சயமாக திருத்தியமைக்கப்படும், இது காலத்தின் கட்டாயம் எனவும் அவர் கூறினார்.

அரச கதிரையில் நிச்சயமாக தமிழர்களுக்கு மிகப்பெரிய ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்றும் ஜோதிடர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதத்துக்குள் தமிழர் அரசியல் தரப்புக்கள் அனைத்தும் மிக மிக நெருக்கமாக ஒன்றிணைவார்கள். மிகப்பெரிய பிடிமானம் தமிழர் தரப்பிற்குக் கிடைக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் உடல் நிலை கடுமையான பாதிப்புக்குள்ளாகும். அப்போது அங்கு ஒரு போட்டி நிலை ஏற்படும். அதன் போது சிறந்த ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அனைவரையும் அரவணைத்துச் செல்லும் நிலை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் 10 லட்சம் ரூபாவுக்கு ஏலமிடப்பட்டுள்ளன மாம்பழங்கள்!

வவுனியாவில் 10 லட்சம் ரூபாவிற்கு மூன்று மாம்பழங்களும், ஒரு மாலையும் ஏலம் போன நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா மரக்காரம்பளை வீதி கணேசபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திலே இந்த ஏல விற்பனை நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதற்கமைய ஆலயத்தின் அலங்கார திருவிழாவில், ஆறாம்நாள் திருவிழாவின் போது இறைவனுக்கு படைக்கப்பட்ட மூன்று மாம்பழங்களும், ஒரு மாலையும் ஏலத்தில் விடப்பட்டுள்ளன.

இதன்போது கடும் போட்டிகளுக்கு மத்தியில் சபரிராஜன் என்ற மாணவன் அவற்றை 10 லட்சம் ரூபாவிற்கு ஏலம் எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிராமப்புற ஆலயம் ஒன்றில் இவ்வாறு பெரிய தொகைக்கு மாம்பழங்கள் ஏலம் எடுக்கப்பட்ட சம்பவம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.



மேலும் மேற்படி ஏலத்தொகை ஆலயத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த ஏல விற்பனையில் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் மிக வேகமாக பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போராட்டம் தவறு என்றால் அதன் விளைவாக உருவாகிய புதிய ஆட்சிக் கட்டமைப்பும் தவறு!

## மு.சந்திரகுமார் கருத்து



மக்களின் இந்த போராட்டம் தவறு என்றால் போராட்டத்தின் விளைவாக உருவாகிய இந்தப் புதிய ஆட்சிக் கட்டமைப்பும் தவறு என்று அர்த்தமாகி விடும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகரீதியில்போராடியவர்களைபயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு –

ஜனநாயக ரீதியில் போராடுவோரை அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அடக்கு முறைச் சட்டங்களால் சிறையில் அடைப்பது தவறு என வும் அப்படிச் செய்தால் அது நாட்டில் மிக மோசமான எதிர் விளைவுகளையே உண்டாக்கும்.

பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதாகக் கூறிக் கொண்டு மறுவளத்தில் அரசியல் நெருக்கடியை உருவாக்கக் கூடாது.

அப்படிச்செய்தால்அதற்காக மிகப் பெரிய விலையை நாடு செலுத்த வேண்டியிருக்கும்.கடந்த கால அனுபவத்தை மீட்டுப் பார்த்தால் இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

ஜனநாயகப்போராட்டங்களுக்கு இடமளித்தால் வன்முறைச் செயற்பாடுகளோ அதற்கான சூழலோ உருவாகாது. ஆகவே, அரசாங்கம் அத்தகைய தவறுகளுக்கு இடமளிக்காமல், செயற்படுகின்றமை அவசியமாகும்.

எனவே ஜனநாயக வழியில் போராடியோரைச் சிறையில் அடைத்துப் பழிவாங்குவதை விடுத்து உரிய– வர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

அவர்கள் மக்கள் நிலை நின்று பகிரங்கமாக முன் வைத்த கோரிக்கைகளின் நியாயத்தன்மையைப் புரிந்து கொண்டு நாட்டின் நெருக்கடியைத் தீர்ப்பதே மிகப் பொருத்தமான வழிமுறையாகும் என்று சமத்துவக் கட்சி கேட்டுள்ளது.

மிக வெளிப்படையான முறையிலேயே கொழும்பு நகரில் 100 நாள்களுக்கும் மேலாக மக்கள் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் பல்வேறு மக்கள் அமைப்புகளும் பல்லாயிரக்கணக்கான மக்களும் பங்குபற்றினர்.

தம்மால் தாங்கிக் கொள்ள முடியாத பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடி போன்றவற்றுக்குத் தீர்வு கிட்ட வேண்டும். அதற்கான ஆட்சிக் கட்டமைப்பு வேண்டும் என்று கேட்டே மக்கள் போராடினர்.

அந்தப் போராட்டத்தின் விளைவே இன்றைய புதிய ஜனாதிபதியும் பிரதமரும் புதிய அமைச்சரவையும் ஆட்சிக்கட்டமைப்புமாகும்.

இந்தப் போராட்டம் தவறு என்றால் போராட்டத்தின் விளைவாக உருவாகிய இந்தப் புதிய ஆட்சிக் கட்டமைப்பும் தவறு என்று அர்த்தமாகி விடும்.

ஆனால், புதிய ஆட்சிக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் அதற்கு வழி சமைத்த போராட்டத்தையும் போராட்டத்தை முன்னெடுத்தோரையும் தவறு எனச் சித்திரித்து அடக்குவது பிழையானதாகும்.

எந்த மக்கள் போராட்டத்தின்போதும் மக்கள் மிக உணர்ச்சிகரமாகவேசெயற்படுவர்என்பது உலகளாவிய அனுபவமாகும். அதுவே இங்கும் நிகழ்ந்துள்ளது.

தாம் சந்திக்கின்ற நெருக்கடிகளுக்கு காரணமான ஊழல், அதிகார துஷ்பிரயோகம், முறையற்ற திட்டமிடல்கள் போன்றவற்றுக்குப் பொறுப்புடையவர்கள் எனக் கருதியே சிலருடைய உடைமைகளை அவர்கள் அழிக்க முற்பட்டனர்.

இது தவறாக இருந்தாலும் மக்களுடைய இத்தகைய உணர்ச்சி நிலையின் தன்மை இப்படித்தானிருக்கும் என்பதைநாம்புரிந்துகொள்ளவேண்டும்.அதேவேளை இவை எவையும் திட்டமிட்ட அடிப்படையில் தொடர்ச்சியாக நடைபெறவில்லை என்பதை இந்தச் சம்பவங்களைக் கூர்மையாக அவதானித்தால் புரிந்து கொள்ள முடியும்.

ஆகவே மக்கள் போராட்டத்தின்போது நடந்த உணர்ச்சிகரமான விடங்களை அதே உணர்ச்சிகரமான நிலையில் அரசாங்கமும் அணுக முற்படுவது பொருத்தமானதுமில்லை. புத்திசாலித்தனமானதும் அல்ல. அப்படிச் செய்தால் அது மேலும் பல நெருக்கடிகளை உண்டாக்கும்.

இந்த அரசாங்கம் நெருக்கடிகளைத் தீர்ப்பதிலேயே அதிக கரிசனையைக் கொண்டுள்ளதாக நாம் நம்புகிறோம். அப்படியிருக்கும்போது அதற்கு எதிர்வளமாக எந்தக் காரணம் கொண்டும் நெருக்கடிகளை உருவாக்குவதாக எந்த நடவடிக்கையும் அமையக் கூடாது என்று வலியுறுத்துகிறோம்.

இதனைப் புரிந்து கொண்டபடியால்தான் ஜனநாயக ரீதியான போராட்டத்தை அடக்க வேண்டாம்.

ஒன்று கூடும் மக்களுடைய உரிமை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தல் விடுக்கக் கூடாது என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் தொடக்கம் அனைத்துத் தரப்பினரும் தமது கண்டனங்களைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆகவே யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு அரசாங்கம் நீதியாக, ஜனநாயக வழிமுறையில் நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் இரு சிறப்பு விருதுகள்பெற்ற இலங்கை வம்சாவளிக் கனேடியர்கள்!



கனடாவில் குடியேறியவர்கள் மத்தியில் வழங்கப்படும் சிறப்பு விருதை பெற்றவர்களில் முதல் 25 பேரில் இரண்டு இலங்கை வம்சாவளி கனேடியர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

கனேடியன் இமிக்ரண்ட் சஞ்சிகையின் வருடாந்த விருது நிகழ்வு அண்மையில் ரொறன்ரோவில் நடைபெற்றது.

இதன்போது 2022 ஆம் ஆண்டின் முதல் 25 கனேடிய குடியேற்றக்காரர்களில் இரண்டு இலங்கை வம்சாவளிக் கனேடியர்களான பேராசிரியர் ஜானக ருவன்புர மற்றும் கலாநிதி சிவகுமார் குலசிங்கம் ஆகியோருக்கு வருடாந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

கனடாவில்குடியேறியவர்களைஊக்குவிக்கும் வகையில் இந்த நிகழ்வு வருடாந்தம் இடம்பெறுகிறது.

### பேராசிரியர் ஜானக ருவன்புர

இந்த நிலையில் இந்த சிறப்பு விருதைப் பெற்ற இலங்கை வம்சாவளி கனேடியரான பேராசிரியர் ஜானக ருவன்புர கட்டுமானப் பொறியியலில் அறிஞரும் விருது பெற்ற கல்வியியலாளரும் ஆவார்.

அவர் கால்கேரி பல்கலைக்கழகத்தில் துணை ஆய்வாளர் மற்றும் இணை துணைத் தலைவர் (ஆராய்ச்சி /சர்வதேசம்) மற்றும் பொறியியல் பேராசிரியராக உள்ளார்.

பேராசிரியர் ருவன்புரா தனது கல்விசார் சாதனைகள், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக சர்வதேச, தேசிய, மாகாண மற்றும் நகராட்சி விருதுகளை வென்றுள்ளார்.

அவர் சமீபத்தில் பெற்ற சில விருதுகளில், சிறப்புமிக்க முன்னாள் மாணவர் விருது (அரிசோனா மாநில பல்கலைக்கழகம்), இலங்கை அறக்கட்டளையின் (லொஸ் ஏஞ்சல்ஸ்) வாழ்நாள் சாதனை விருது மற்றும் கல்கரியின் சர்வதேச சாதனைகள் ஆகியவை அடங்கும்.

### கலாநிதி சிவகுமார் குலசிங்கம்

கலாநிதிசிவகுமார்குலசிங்கம்,பல்கலைக்கழக சுகாதார வலையமைப்பின் ரொறொன்ரோ புனர்வாழ்வு நிறுவனத்தில் இணைந்த ஒரு விருது பெற்ற உடல் மருத்துவம் மற்றும் மறுவாழ்வு மருத்துவர் மற்றும் ரொறண்டோ பல்கலைக்கழகத்தின் உதவி பேராசிரியரும் ஆவார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டதாரி ஆவார். கனடாவுக்குக் குடிபெயர்வதற்கு முன், குலசிங்கம் இலங்கையில் உள்ள தேசிய புனர்வாழ்வு வைத்தியசாலையில் முன்னணி மருத்துவராகப் பணியாற்றினார்.

அவர் தடகள கனடா, சர்வதேச பாராலிம்பிக் கமிட்டி வகைப்படுத்தி, உலக பாரா – தடகளம் மற்றும் உலக பாரா – டான்ஸ் விளையாட்டுகளுக்கான சர்வதேச பயிற்சியாளர் மற்றும் தேசிய பயிற்சியாளர் மற்றும் பாரா – தடகள வகைப்படுத்தி ஆவார்.

ரொறண்டோ பல்கலைக்கழகத்தின் மருத்துவத்தில் மனிதநேயத்துக்கான மைக்கேல் கார்டன் விருது மற்றும் இந்த ஆண்டின் மிகச் சிறந்த இளைஞர்கள் – மனிதநேய மற்றும் தன்னார்வ சேவைகள், ஜூனியர் சேம்பர்ஸ் இன்டர்நேஷனல், இலங்கை (2004) உட்பட பல மதிப்புமிக்க விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர், சீன் பிரேசர், உயர் ஸ்தானிகர் நவரத்ன மற்றும் கனடாவிலுள்ள கல்வியியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தின் ஒரு பிரிவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பது கவலைக்குரியது!

## சனத் ஜயசூரிய வேதனை



போராட்டகாரர்கள் அதிகளவில் கைது செய்யப்படுவது மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சிலரை தடுத்து வைத்துள்ளமை என்பன மிகவும் கவலைக்குரிய விடயங்கள் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடு தற்போது மெதுவாக வழமையான நிலைமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது எனவும் பின்நோக்கி செல்லாமல் முன்நோக்கி செல்ல வேண்டிய காலம் இது எனவும் சனத் ஜயசூரிய கூறியுள்ளார்.

தவறு செய்தால் மன்னிப்பது மனிதத்தன்மை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். சனத் ஜயசூரிய தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி முதல் கடந்த ஜூலை 9 ஆம் திகதி வரை நாட்டில் நடந்துவந்த பாரிய எதிர்ப்பு போராட்டங்களில் கலந்துகொண்டவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் தொடர்பாகத் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடும் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 102

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## வைத்தியர் பெர்னாண்டோவின் தொடர் கதைகள்









திருக்கோணேஸ்வரத் தோற்றம்

இலங்கையை உருவாக்கியவன் விஜயனா, அது தமிழ் மக்களின் இனப்படு கொலையில் நடந்ததா என்பவற்றை புராண, இதிகாச ஆய்வாளர்களுக்கும் சரித்திர ஆசிரியர்களுக்கும் விட்டு விட்டு, இப்படிப் பொறுப்பற்ற கருத்துக்களால் சமுதாயத்தில் முக்கியமாக இரு இனத்தவர்களின் உறவில் இருக்கும் கலப்பு திருமணங்களுக்கு அவை எவ்வளவு பாதிப்பை தரும் என்பதை உணரவில்லையா என்று அவர் கேள்வி எழுப்பினார்.

1983இல் கலவரங்கள் நடந்த போது மெல்போர்னில் கல்விமான் ஒருவர் இனப்பாகுபாடுகாரணமானவாதங்களில் தனது சிங்கள மனைவியின் குரல் வளையை நெரிக்க, அது சம்பந்தமான விடயம் பொலிஸார் சம்பந்தபடும் நிலைமை வரை வந்ததை அறியவில்லையா என்றும் அவர் கேட்டார்.

மேலும் புதிய தமிழ்ச் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதன் உதவித் தலைவர் ஒரு மருத்துவர். கலப்புத் திருமணத்தில் கணவர் சிங்களவர் என்ற காரணத்துக்காக அங்கத்துவம் வகிக்க முடியாது என நிராகரிக்கலாம் எனவும், அதற்கான காரணம் அவர் உளவு பார்க்கக் கூடும், மேலும் தங்கள் சங்கத்தின் பாதுகாப்பு கருதியதும் எனச் சொல்லப்பட்டது எனவும், தமிழ் மக்களின் குறுகிய எண்ணங்களும், தன்னலங்களும், திமிர்த்தனங்களும்தான் இப்படியான நிலைகளை ஏற்படுத்துகின்றன என்பதும் அவரின் கருத்து.

மேலும், 'நீங்கள் (மூர்த்தி) ஒரு சட்டத்தரணி. கலாசாரத்தில் அனுபவம் கொண்டவர். உங்களைப் போன்ற பலருக்கு உலகிலேயே தமிழ்க் கலாச்சாரம்தான் உன்னதமானது என்ற பெருமை உண்டு. ஆனால் அதில் தமிழ்ப் பெண்ணை திருமணம் செய்தால் உடனேயே அவன் தமிழனாகி விடவேண்டும், தனித்தன்மை இருக்கக் கூடாது என்ற கலாச்சாரத்தையும் உலகுக்குக் காட்டுகிறீர்கள், சரித்திரங்களை சரித்திர ஆசிரியர்களிடம் விட்டுவிட்டு, நீங்கள் இலங்கையின் சரித்திரத்தை புதிதாக எழுத ஆரம்பிக்க வேண்டாம்' – என்று அறிவுரை தரப்பட்டது.

தமிழ்மன்னர்களைபற்றிபேசும்போது சிங்களபிரச்சாரங்களுக்கு எல்லாம்(இந்த நூலின் ஆக்கத்திற்கான ஆதரவுகள், கூட உறுதுணையாக இருந்த) முன்னாள் சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதி மதிப்புக்குரிய வீரமந்திரியை (இந்த நூல் எழுதப் பட்ட போது ஆஸ்திரேலியாவில் குடியிருந்தார்) ஆதாரமாக அவர் கூறுகிறார்.

வீரமந்திரியின் கருத்துப்படி '1600 இல் ஆங்கிலேயன் ரொபேர்ட் நொக்ஸ் பிடிபட்டபோது அவன் திருகோணமலையை அண்டிய கொட்டியாறு என்ற இடத்தில் கண்டியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சிங்கள மன்னனின் படைகளால்தான் கைப்பற்றப்பட்டான், அந்தப்பகுதிகள் அவனது ஆட்சியில்தான் இருந்தன, அதாவது கண்டி மன்னனின் அதிகாரத்துக்கு அமைவாக அங்கிருந்து நொக்ஸ் உள்நாட்டு வழியாகவே கண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு அவன் பல காலம் சிறை வைக்கப்பட்டு இருந்தான். அவன் கண்டிய மன்னனால் சிறைப் பிடிக்கப்பட்டமையும் தொடர்ந்து பல வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டமையும் ஐரோப்பாவில் கூட நன்கு தெரியப்பட்ட விடயங்கள்.'

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

இலங்கையைப் பற்றி ஆராயும் சரித்திர ஆசிரியர்கள் தேவ நம்பியதீசன் என்ற சிங்கள மன்னன் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் புனித அரச மரக் கன்றைப் பெற்றுக் கொள்வதைப் பற்றி அறிவார்கள். அதனைப் பெறுவதற்காக அரசன் யாழ்ப்பாணத்தின் வட மாகாணத்தில் இருந்த ஜம்புகுள பொத்தனை என்ற நீர் நிலையை அலைபாய்ந்துதான் (wading) பெற்றுக் கொண்டான் எனக் குறிக்கிறது. ஆகவே இந்தப் பகுதிகளும் கண்டிய மன்னனின் கீழ், அவனது ஆளுகைக்குக் கீழ்தான் இருந்தன என்பது தெளிவாகிறது. இவற்றிற்கு முக்கியமான ஆதாரங்களாக வடமாகாணத்தின் பல பெயர்கள் பாலி, சிங்கள மொழிகளின் திரிபாகக் காணப்படுவதும், பெருமளவு பௌத்த சாதனங்கள், தொல்பொருள்கள் அங்கு கிடைப்பது மாகும்.



நீதிக்கான சவதேச ஆயத்தின் உப தலைவராகவிருந்த நீதியரசர் வீரமந்திரி

கந்தரோடை, நிலாவரை, கொட்டியாவத்தை போன்ற யாழ்ப்பாணப் பகுதிகளிலும் பிரம்மாண்டமான பௌத்த விகாரைகளின் இடிபாடுகள், திரியாய் போன்ற பகுதிகளில் பல கல்வெட்டுக்கள் சிங்கள மன்னர்கள் இவற்றைப் பதிந்த சாட்சியங்களாகவும் விளங்குகின்றன. ஆகவே சரித்திரம்தொடங்கிய நாள்களுக்கு முன்பிருந்தே இரண்டு இறைமை உள்ள நாடுகள் இலங்கையில் இருந்தன என்பது அபத்தம் என்கிறார்.

மேலும் அந்நூலில் தரப்படும் தகவல்களையும் ஆதாரங்களையும் பதிந்து கொண்டு சென்றால் இது புராண, சரித்திர பாடத்தின் ஆய்வறிக்கையாகிவிடும் என்பதால், இந்தவித ஆதாரம் காட்டும் பிரசாரங்களையும் அதன் பின் நின்றவர்களையும் கோடி காட்டி, தமிழ் சரித்திர ஆய்வாளர்கள் மற்றும் புத்திஜீவிகளுக்கு அவற்றை விட்டு விடுகிறேன்.

### தமிழ் மக்களின் எதிர்வலைகள்

சரித்திரங்களும் புராண இதிகாசங்களும் சர்ச்சைக்குரியவை. ஒவ்வொரு தரப்பும் அதனைத் தத்தம் பக்கத்து நியாயங்களுக்கு வளைக்கும். பல சரித்திர ஆசிரியர்கள், இன்றைய ஆராய்ச்சியாளர்களான இந்திரபாலா, சச்சிபொன்னம்பலம், சச்சிஸ்ரீகாந்தா, முதலியார் இராசநாயகம், இந்தியாவின் சோப்ரா, ரவீந்திரன் சுப்பிரமணியம் போன்றவர்கள் இவற்றைக் குறித்து எழுதியிருந்தாலும் அவை இலக்கிய, புராண ஆதாரங்களில் இருந்தும், சோழ மன்னர்கள் அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற பகுதிகளை படையெடுப்பின் மூலம் ஆண்டமையையும் குறிப்பிடுகின்றன. இந்த சோழர் ஆட்சியை – எல்லாளனினதும் கூட – ஈழத் தமிழ் மக்களின் இறைமையான ஆட்சியாக சரித்திர ஆசிரியர்கள் காண்பதில்லை. சோழ மன்னர்களின் – தமிழ்நாட்டின் – அதிகாரமாகவே அவை கருதப்பட்டன.

யாழ்ப்பாண ராஜதானி எனப்பட்ட அரசும் பிரதேசங்களும் பாண்டிய மன்னன் மறவர்மன் குலசேகரம் 1268 – 1038 கி.பி. ஆரிய சக்கரவர்த்தி என்ற படைத் தளபதியின் தலைமையில் அனுப்பிய படைகள் சிங்களப் படைகளை வென்று, கௌதம புத்தரின் தந்தத்தையும் கண்டியிலிருந்து மதுரைக்கு கொண்டு சென்றதாக கூறுகிறது. இந்தக் காலத்தில் சந்திரபானு தாம்பரலிங்கம் என்ற குறுநில மன்னனின் படையெடுப்பால் யார் அதிகாரத்தில் இருந்தது என்ற குழப்பம் இருந்தாலும், பாண்டிய படைத்தளபதி ஆரிய சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்தின் அதிபதியாக நிலை நிறுத்தப்பட்டார் என்பது தெளிவு. பாண்டிய அரசுகள் தென்னாட்டில் முஸ்லிம் படையெடுப்புகளால் நிலைகுலைய, யாழ்ப்பாண ராஜதானி ஆரிய சக்கரவர்த்தியால் இறைமையுள்ளதாக ஆக்கப்பட்டது. 14 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் காலப் பகுதியில் சிங்கள அரசுகளும் ஆதிக்கங்களும் பலவீனமாக, ஆரிய சக்கரவர்த்தியின் பரிபாலனத்தில் இருந்த யாழ்ப்பாண ராஜதானி தென்பகுதிக்குச் சென்று புத்தளம் பகுதிகளைத் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அடுத்த காலப் பகுதிகளில் மாத்தளைப் பகுதிகளையும் கைப்பற்றி, ஆரிய சக்கரவர்த்தியின் கடற்படைகள் பாணந்துறை வரையும் அதிகாரம் கொண்டிருந்தன எனவும், அது தொடர்ந்தும் பயணித்து, முழு இலங்கையையும் ஆள்கொள்வது இந்தியாவின் விஜய நகரப் பேரரசுடன் ஏற்பட்ட முரண்பாடுகளாலே தடைப்பட்டது என்றும் குறிக்கின்றன. ஆயினும் இவற்றைப் பிறிதாக்கி, இவை சில கால குறுநில மன்னர்களின் ஆட்சியாகவே பல சிங்கள சார்பின் புத்திஜீவிகளும் கலாநிதிகளும் அவற்றை அணுகுகிறார்கள்.

கலாநிதி பரணவிதான 13 ஆம் நூற்றாண்டு காலத்துக்கு முன் வடபகுதிகளில் தமிழரசு ஒன்று இருந்தது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பது தொல்பொருள் கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்ற ஆதாரங்கள், சாட்சியங்கள் இன்றியே எனவும், அப்படியான சாட்சியங்கள் எதுவுமே இதுவரை இப்பகுதிகளில் கண்டெடுக்கப்படவில்லையாதலால் இவை தவறான கருத்துக்கள் எனவும் கூறுகிறார்.

சரித்திரங்கள் – முக்கியமாக வென்றவர்களால் – அதிகாரத்துக்கு வருபவர்களால் – எப்படியெல்லாம் எழுதப்படலாம், திரிவுபடுத்தப்படலாம் என்பதை இவற்றில் பார்க்கலாம். பாபர் மசூதியை பாருங்கள். முஸ்லிம் படையெடுப்பின் காலத்தில் கட்டப்பட்டு, சுதந்திர காலத்தில் பிரிவினைக் கலகங்களையும் தாண்டி, நேரு, இந்திரா, ராஜீவ் அரசாட்சிகளிலும் மதக்குரோதங்கள் உற்சாகப்படாத நிலையில், மசூதியாக வழிபாட்டுத் தலமாக இருந்தது. 'ஹிந்துத்துவா' முளைத்து வளர்ந்தவுடன், பாபர் மசூதி கிருஷ்ணர் கோவில் இருந்த இடத்தில் அழித்துக் கட்டப்பட்டது எனக் கூறி, அது இடிக்கப்பட்டு, வழக்குகளும் அதன் உரிமைக்கு நடந்து, அரசின் ஆதரவில் கிருஷ்ணர் கோவில் அங்கு குடிகொள்கிறது. பாபர் மசூதியை வேறு இடத்தில் கட்டுவதற்கு நிலம் தரப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அங்கு அது கட்டப்படும். கட்டப்பட்டால் அந்த மசூதி 'பாபர் மசூதி என்ற உணர்வை' ஹிந்துத்துவத்திற்கு கிருஷ்ணர் கோவில் தருவது போல தராது.

இந்த நிலைமைகள் தமிழ் மக்களின் பல தலங்களுக்கு அப்படியான நெருக்கடிகளைக் காலங்காலமாக கொண்டு வந்திருக்கின்றன. அவர்கள் பலவீனமாக, குருந்தூர்மலை, கன்னியாக் கிணறுகள் போன்றவற்றுக்கு வந்தன. அதற்கு முன் தொல்பொருள் ஆதாரங்களிலிருந்து திரியாய் மிளிர்ந்தது. இப்பொழுது கந்தரோடை மீள் அகல்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கோஷங்கள். நெளுகம மற்றது.

சன்சோனி ஆணைக் குழுவின் முன் வாரக்கணக்கில் திருகோணமலை கோணேஸ்வர் ஆலயத்தைப் பற்றி ஆதாரப்படுத்த வேண்டி இருந்தது. பதிகங்கள் பெற்ற திருத்தலம் இது. ஆனால் சிங்கள, பௌத்த தீவிரவாதப் பிரதிநிதிகள் அவை முன்னர் இருந்த பெரிய பௌத்த விகாரையின் இடிப்பாடுகளில் பின்னர் இன்றைக்கு சிவாலயத்தைக் கட்டி ஆட்சி செய்கின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் சுதந்திரத்துக்கான தமிழர்களின் பல போராட்டங்கள்

- அருண் ஜனார்த்தனன் -
(ஆங்கிலத்தில்)




இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தொடக்கமாகக் 1857 ஆம் ஆண்டு குறிக்கப்பட்டாலும், அதற்கு முன்பே தங்கள் சொந்த திராவிடப் பிரதேசங்களில் ஆங்கிலேயர்களை துணிச்சலாகச் சவாலுடன் எதிர்கொண்ட ஒரு டஜன் தமிழ் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாழ்க்கையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இம்முறை தனது சுதந்திர தின உரையில் பதிவு செய்தார்.

அவர்கள் ஒவ்வொருவரின் கதைகளையும் தெளிவாக விவரித்த ஸ்டாலின், இந்தியாவின் சுதந்திரத்திற்கான போராட்டம் 1857 கலகம் அல்லது கிளர்ச்சியில் இருந்து தொடங்கவில்லை, மாறாக மிகவும் முன்னதாகவே இருந்தது என்றார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னோடிகள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியபோது, அது நீண்ட காலமாக தமிழ் தேசியவாத சுதந்திரக் காதையின் ஒரு பகுதியாக இருந்ததாகக் கூறுகிறார். அது, இந்தியாவின் நவீன வரலாற்றை எழுதுவதில் இலக்கிய, அரசியல் மற்றும் தார்மீக மேலாதிக்கத்தைக் கொண்டிருந்த வட இந்தியர்களான வரலாற்றாசிரியர்களிடையே ஒரு சார்புடையதாகக் காணப்படுவதோடு எதிராகவும் பயன்படுத்தப்படுகிறது என்றார்.


இந்த ஆரம்பகால வரலாற்றைப் பற்றி நாங்கள் நீண்ட காலமாகப் பேசி வருகிறோம், ஆனால் அது தமிழ்நாட்டுடன் தொடர்புடைய பிரச்சனைக்குரியதாகக் கருதப்படும் தமிழ்த் தேசியவாதம் மற்றும் பிரிவினைவாத குறியீடுகளின் கீழ் புதைக்கப்பட்டிருக்கின்றது என்கிறார் சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் ஓய்வுபெற்ற பேராசிரியர் ராமு மணிவண்ணன்.

ஸ்டாலின் தனது பேச்சின் ஒரு பகுதியை இந்த ஒவ்வொரு போராளிகளின் கதைகளையும் தெளிவாக எடுத்துரைக்க அர்ப்பணித்தமை மூலம் தமிழர்களும் திராவிட இயக்கமும் தேசபக்தியில் பின்தங்கவில்லை என்ற அரசியல் செய்தியையும் டெல்லி வரை அனுப்ப



முயன்றார்.

ஆயினும் கூட, இந்த பேச்சு 1857 க்கு முந்தைய கிளர்ச்சியாளர்களின் மிகவும் ஈர்க்கக்கூடிய சில சுயசரிதை விவரங்களின் திறம்பட மெய்யியல் காட்சியாக வெளிப்படுத்துவதாகவும் இருந்தது.







தென்தமிழ்நாட்டின்தென்காசிக்கு அருகில் உள்ள நெல்கட்டான் சேவலை ஆண்ட பூலித்தேவன், 1755ல் கிழக்கிந்திய கம்பெனியிடம் ஒரு தானியம் கூட வரி கட்ட முடியாது என்று சொன்ன கதையுடன் தொடங்கினார் ஸ்டாலின்.

ஸ்டாலின் பேசிய மற்றொரு வரலாற்றுக் கதாபாத்திரம் ‘மாவீரன் (பெரும் போர்வீரன்)’ மருதநாயகம், ஆங்கிலேயர்களின் கீழ் சிப்பாய்களின் தளபதியாக உருவெடுத்து, மதுரையின்‘கவர்னராக’பணியாற்றி, போரில் ஹைதர் அலியைத் தோற்கடித்த 17 ஆம் நூற்றாண்டின் போர்வீரன்.

1764 ஆம் ஆண்டில், சிவகங்கையை ஒட்டியுள்ள பனையூரைச் சேர்ந்த மருதநாயகம், ஆங்கிலேயர்களுடன் ஒரு உக்கிரமான போரில் ஈடுபட்டார், மேலும் அவர் சரணடைய மறுத்தமையாக் 1764 இல் கொல்லப்பட்டார்.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு, நடிகர் கமல்ஹாசன் மருதநாயகத்தின் வரலாற்றுப் படத்தைத் தயாரித்து நடிக்கப் போகிறார் என அறிவித்தார், இருப்பினும் அது இப்போது ஹாசனின் பல நிலுவையில் உள்ள திட்டங்களில் ஒன்றாகும்.

தமிழ்நாட்டின் பாஞ்சாலங்குறிச்சியின் 18 ஆம் நூற்றாண்டின் அரசரான கட்டபொம்மன், தமிழ்நாட்டின் வீடுகளில் எல்லாம் ஒலிக்கும் பெயர். கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிரான துணிச்சலான எதிர்ப்பால் தமிழின் பெருமையைத் வெளிப்படுத்துவதற்காக அடிக்கடி இனைவு கூர்ந்து அழைக்கப்படுபவர். 1799 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் தொடுத்ததற்காக கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.

ஸ்டாலின் தனது உரையில் கட்டபொம்மனை மேற்கோள் காட்டி, என்னிடம் நன்கொடை கேளுங்கள், நான் தருகிறேன். வரி கட்டச் சொல்லுங்கள், நான் தர மாட்டேன்.” என்றார்.

“லெப்டினன்ட் பேனர்மேன், அப்போதைய (மெட்ராஸ்) கவர்னர் எட்வர்ட் கிளைவுக்கு எழுதிய கடிதத்தில், தூக்கு மேடையை நோக்கிச் செல்லும் போதும் கூட, தன்னைக் காட்டிக் கொடுத்தவர்களைப் பார்த்து, பெரும் போர்வீரன் கட்டபொம்மன் புன்னகைத்தான் எனக் கூறப்பட்டுள்ளது.” – என்றார் ஸ்டாலின்.

ஸ்டாலினின் உரையில் பல வீரர்களும் அவர்களின் வீரகாவிய பெருமைகளும் இடம் பெற்றுள்ளன. கட்டபொம்மனின் படைத் தளபதி சுந்தரலிங்கம் மற்றும் ஆங்கிலேயர்கள் மீது தற்கொலைத் தாக்குதலை நடத்திய அவரது உறவினர் வடிவு பற்றியும் விவரிக்கப்பட்டது.

சிவகங்கையை ஆங்கிலேயர்களிடம் இருந்து கைப்பற்ற பெண்களின் படையணியைத் திரட்டிய வேலு நாச்சியார் ‘ஆங்கிலேயருடன் போரிட்ட முதல் இந்திய ராணி’ என மெச்சப்படுகின்றார்.

குயிலி, வேலு நாச்சியாரின் இராணுவத் தளபதி. தன்னைத்தானே தீயிட்டுக் கொண்டு கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆயுதக் களஞ்சியத்தில் குதித்தவர். இந்திய வரலாற்றில் முதல் பெண் தியாகி என்று அடிக்கடி நினைவு கூரப்படுபவர்.

‘திராவிட நாடு’ கோரிக்கை மற்றும் அதன் பரிணாம வளர்ச்சி பற்றிய சிறு வரலாற்றையும் அவர் விளக்கினார்.

தங்கள் வல்லாரிகளால் (பூமராங் வடிவிலான பாரம்பரிய, கொடிய ஆயுதம்) பிரிட்டிஷ் பீரங்கிகளை எதிர்கொண்ட சகோதரர்கள் சின்ன மருது மற்றும் பெரிய மருது ஆகியோரின் சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பை தந்தார் முதல்வர் .

1805 ஆம் ஆண்டு தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்ட தீரன் சின்னமலை மற்றும் அவரது தலைவரும் உளவாளியுமான பொல்லனும் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1857இற்கு முன்பே, 1806 இல் வேலூர் சிறையில் இருந்த சிப்பாய்கள் ஆங்கிலேயர்களுக்கு பாடம் புகட்டினார்கள் – என்றார் முதல்வர் ஸ்டாலின்.

தமிழர்களும் தமிழ் அரசியலும் பெரும்பாலும் பிரிவினைவாதம் மற்றும் தமிழ்த் தேசியவாதத்தின் உள்ளார்ந்த போக்குகளைக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டாலும், ஸ்டாலினின் இந்திய சுதந்திரத்தின் 75 ஆண்டுகளைக் குறிக்கும் பேச்சு, ஆங்கிலேயருக்குத் தமிழ்நாட்டில் தனிமனித மற்றும் அமைப்புரீதியான எதிர்ப்பு முன்னரே இருந்ததைத் தெளிவுபடுத்தும் முயற்சியாகும்.









சிலருக்கு 1857 இல் சிப்பாய்க் கலகத்துடன்தான் சுதந்திரப் போராட்டம் தொடங்கியது, ஆனால் அதற்கு முன்பே தமிழர்கள் அதை ஆரம்பித்துவிட்டார்கள்... காந்தியின் கொலைக்குப் பிறகு இந்தியாவை காந்தி தேசம் என்று அழைக்க வேண்டும் என்று விரும்பியவர் தமிழ் சீர்திருத்தவாதி பெரியார் என்று தமது ஓகஸ்ட் 15 உரையில் ஸ்டாலின் கூறினார்.

(மூலம்: ‘த இந்தியன் எக்ஸ்பிரஸ்’)

## அரசியல் ஸ்திரத்தன்மை இல்லையேல் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இலங்கைக்குப் பொருளாதாரத்தைக் கொண்டுவரும் வழிகளாக வெளிநாட்டில் தொழில் புரிவோர் வருமானம், சுற்றுலாத்துறை வருமானம், ஏற்றுமதி வருமானம், வெளிநாட்டு முதலீடு என்பவற்றை முக்கிய காரணியாகக் கொள்ளலாம். ஆனால், சமூக ஸ்திரத்தன்மை கிடையாது. இதனால் அரசியலில் ஸ்திரத்தன்மை இல்லை. அரசியலில் ஸ்திரத்தன்மை இல்லாத நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மைய எதிர்பார்க்க முடியாது.

தற்போதைய அரசியல் அமைப்புப்படி முத்துறை அதிகாரங்களான சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை என்பன பொதுமக்கள் வசம் வரவேண்டும். தற்போது நாட்டில் மேற்படி மூன்று அதிகாரங்களும் மக்கள் கையில் இருப்பதாகக் கூறினாலும் மக்கள் அதனை தமது பிரதிநிதிகளுக்கு வழங்கி விட்டனர். உண்மையான மக்கள் கருத்து மக்கள் பிரதிநிதிகள் வசம் இல்லை.

கடந்த சில மாதங்களாக நான்கு முறை ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆனால், 225 பிரதிநிதிகளில் மாற்றம் இல்லை. ஒரே நாடாளுமன்றம். அதே நாடாளுமன்ற உறுப்பினர்கள். ஆனால், பிரதமரும் ஜனாதிபதியுமாக நான்கு பேர் மிகக் குறுகிய காலத்தில் ஆட்சி செய்தனர். அரசியலில் ஸ்திரத்தன்மை இல்லை என்தையே இது காட்டுகின்றது. எனவே, அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத நாட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்வர மாட்டார்கள். உள்ளவர்களும் திரும்பிச் சென்று விடுவர்.

எனவே, உள்நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொதுமக்களின் அதிகாரம் மீளப் பெறப்பட வேண்டும். அதற்குப் பொதுத் தேர்தல் ஒன்று தேவை. இதற்காகக் கிராம மட்டத்தில் அரசியல் நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஏற்கனவே உள்ள கிராம மட்ட நிறுவனங்கள் சக்தி மிக்கதாக்கப்பட வேண்டும் - என்றார்.

## 12 அத்தியாவசியப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருளைக்கிழங்கு (இறக்குமதி) 40 ரூபா குறைக்கப்பட்டு 280 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ நாட்டரிசி 20 ரூபா குறைக்கப்பட்டு 198 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

வெள்ளைச் சீனியும் 7 ரூபா குறைக்கப்பட்டு 298 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

## புரட்சியை ஏற்படுத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்ற முடிந்தது. எனினும், அந்தப் பாரிய புரட்சியையும், மக்கள் போராட்டத்தையும் முன்னெடுத்த இளம் தலைமுறையினருக்கு எதிராக அரச அடக்குமுறை ஏவப்படுகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக அவர்களை அரசு வேட்டையாடுகின்றது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இளைஞர் சீர்திருத்தங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இளைஞர் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், கல்வியாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பலர் இதன்போது கலந்துகொண்டனர். இந்தப் பணியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட சீர்திருத்தங்களுக்கான செயலகம் ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று இளைஞர்களை வேட்டையாடும் யுகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வசந்த முதலிகே உள்ளிட்ட பலருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்க ஜனாதிபதியும் அரசும் நடவடிக்கை எடுத்துள்ளது.

தமது சொந்த அரசியல் கருத்தை முன்வைக்கும் தவறுக்காக அரசு இளைஞர்களை இப்படி நடத்துகின்றதா எனக் கேள்வி எழும்புகின்றது. அரச பயங்கரவாதத்தில் இருந்து அரசு உடனடியாக வெளியேற வேண்டும்.

அநீதிக்கும், அநியாயத்துக்கும், அடக்குமுறைக்கும் எதிராக முன்நிற்கும் இளைஞர் சமூகத்துடன் ஒன்றிணைந்து, ஐக்கிய மக்கள் சக்தி செயற்படும் - என்றார்.

## பயங்கரவாதத் தடுப்புச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தங்களை மேற்கொண்டு ‘தேசிய பாதுகாப்புச் சட்டம்’ என்ற புதிய சட்டத்தை உருவாக்குவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று நீதி அமைச்சர் அமைச்சரவைக்குத் தெளிவுபடுத்தினார். எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டமாக விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் நீதி அமைச்சர் அமைச்சரவைக்கு விளக்கமளித்தார் - என்றார்.

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடருக்கு முன்னர் நாட்டின் தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கொழும்பிலுள்ள தூதுவர்கள் , உயர்ஸ்தானிகர்களை அண்மையில் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பின்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விரிவான மீளாய்வை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவரால் விளக்கமளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரூ.50 கோடி கடல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தில் சுமார் பத்துக் கோடி ரூபா (இலங்கைப் பணத்தில் சுமார் 50 கோடி ரூபா) பெறுமதியான கடல் அட்டை மற்றும் சுறாப் பீலி (செட்டைகள்) என்பன இராமேஸ்வரம் கியூப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்குக் கடல் கட்டை கடத்தப்படுவதாக கியூப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே மேற்படி பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 50 மூடைகள் பதப்படுத்திய கடல் அட்டை மற்றும் 11 மூடைகள் சுறாப் பீலி (செட்டைகள்) எனபன கைப்பற்றப்பட்டுள்ளன தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பொருள்களை ஒரு படகில் ஏற்றிய நிலையில் படகுடன் கைப்பற்றிய பொலிஸார் இதன்போது சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இதேநேரம் கைப்பற்றப்பட்ட பொருள்களின் பெறுமதியான 50 கோடி ரூபா என்பது இந்திய நாணயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரணிலைச் சந்தித்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தளபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் மரியாதை நிமித்தம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது நினைவுப் பரிசுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## மாணவன் காலில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலணிக்குள் ஏதோ நெளிவதை உணர்ந்து பாடசாலைக்கு வந்து காலணியைக் கழற்றினான்.

காலணிக்குள் குட்டிப் பாம்பு இருந்ததை கண்டு அனைவரும் பதறிப்போயுள்ளனர். ஆசிரியர்கள் உடனடியாக மாணவனை கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்தனர். இது தொடர்பில், கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ஜே.விஜேசூரிய தெரிவிக்கையில், மாணவனைப் பாம்பு தீண்டியிருக்கவில்லை என வைத்திய பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் மாணவன் நலமுடன் உள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாம்புக் குட்டி வீட்டில் வைத்து மாணவனின் காலணிக்குள் புகுந்திருக்கலாம் எனவும், மாணவன் அதை கவனிக்காது காலணியை அணிந்து வந்திருக்கலாம் எனவும் தெரிய வருகிறது.

## நம்பகத்தன்மையை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

கடந்த சில நாட்களுக்கு முன்பாக குறிக்கப்பட்ட சில புலம்பெயர் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையையும், அதேபோல் புலம்பெயர் தனிநபர்கள் சிலரின் மீதான தடையையும் நீக்கியுள்ளதாக அரசு வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது. தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் பணியாற்றும் சில கட்சிகளும் அமைப்புகளும் இதனை வரவேற்றுள்ள அதேவேளை, பலர் இந்த அறிவித்தல் தொடர்பில் அரசின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்புகின்றனர்.

கடந்த ரணில் - மைத்திரி அரசாட்சியின் போது, இந்தத் தடைகள் நீக்கப்பட்டிருந்த போதிலும் கூட, கோட்டாபய ராஜபக்ஷ அரசில் மீண்டும் இந்தத் தடைகள் விதிக்கப்பட்டன. இது ஒருபுறமிருக்க, ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கின்ற காலங்களில், இலங்கை அரசு இவ்வாறான சில அறிவித்தல்களை வெளியிடுவதும் ஒரு நடைமுறையாக இருக்கின்றது.

இலங்கை இரண்டு முக்கிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றது. ஒன்று பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையில் இருக்கின்றது. அந்த வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பு தேவையாக இருக்கின்றது. அவ்வாறான நிதிநிறுவனங்களைத் திருப்திப்படுத்துவதும் அதே சமயம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகம் போன்றவற்றைத் திருப்திப்படுத்துவதும் இலங்கைக்கு முக்கியத் தேவைகளாக இருக்கின்றது. ஆகவே, புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் என்பது அரசு தன்னைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு எடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகவே தோற்றம் அளிக்கின்றது.

இலங்கை அரசு பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தாலும் அந்த உறுதிமொழிகளிலிருந்து பல சந்தர்ப்பங்களிலில் பின்வாங்கியிருக்கின்றது. தமிழ்த் தலைவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருதரப்பும் கையெழுத்து வைத்ததன் பின்பாக, அந்த ஒப்பந்தத்தின் பல சரத்துக்களை ஒருதலைப்பட்சமாகவே விலக்கிக்கொண்டதும், குறிப்பாக 13ஆவது திருத்தத்தில் உள்ள அம்சங்களையே நடைமுறைப்படுத்த மறுப்பதும், இவற்றுக்கு நல்ல உதாரணங்களாகும். ஆகவே, இன்று ஒருசில அமைப்புக்கள் மீது நீக்கப்பட்ட தடையை, வரப்போகின்ற புதிய அரசு விலக்கிக்கொள்ளமாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இந்த நாட்டிலிருந்து மில்லியன் கணக்கான தமிழ் மக்கள் புலம்பெயர்வதற்குக் காரணமாக இருந்தது அரச பயங்கரவாதமே. தமிழ் மக்களுக்கு எதிராகப் பாவிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் இதுவரை நீக்கப்படவில்லை. அரசு தனக்குத் தேவையான நேரங்களில் சில தற்காலிக ஏற்பாடுகளினூடாக புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பைப் பெற முயற்சித்து வருகின்றது. இந்த விடயங்களை ஈழத் தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழர்களும் சரியாகப் புரிந்துள்ளனர் என்பதை அரசு நினைவில் கொள்ளவேண்டும்.

மிகநீண்டகாலமாக இருக்கக்கூடிய தேசிய இனப்பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வை முன்வைப்பதுடன், இந்நாட்டில் சமபங்கைக் கொண்டுள்ள தமிழ் மக்களை சமத்துவமாக நடத்துவதற்கான கொள்கை முடிவுகளை அரசு வெளிப்படுத்த வேண்டும்.

அரசியல் சாசனத்தில் உள்ளவற்றையே நடைமுறைப்படுத்த மறுப்பதும், கொடுக்கப்பட்ட உரிமைகளையே மீளப் பறித்தெடுப்பதும் என்ற போக்கு தொடர்ச்சியாகவே நிலவி வருகின்றது. ஆகவே, ஒருகையால் கொடுத்து மறுகையால் பறிக்கின்ற போக்குக்கும் அரசியல் சாசன விடயங்களை மேவிச்சென்று அரசியல் சாசனத்தில் உள்ளவற்றையே நடைமுறைப்படுத்த மறுக்கின்ற போக்குக்கும் தீர்வுகள் எட்டப்படவேண்டும்.

பொருளாதார வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்குப் புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பை இலங்கை அரசு எதிர்பார்க்குமாக இருந்தால், அந்த ஒத்துழைப்பு என்பது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஊடாக நடக்க முடியுமே தவிர, கொழும்பை நம்பி அந்த ஒத்துழைப்புகள் வரமாட்டாது என்பதையும் இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

அந்தவகையில், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான இதயசுத்தியுடனான காத்திரமான பேச்சுக்களும் அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுக்களும் இடம்பெறவேண்டும். அத்துடன் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவை தொடர்பில் நியாயமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய பரிகாரங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று கோருகின்ற அரசு மேற்கண்ட விடயங்களைக் கவனத்தில்கொள்ள வேண்டும். ஆனால், சாண் ஏற முழும் சறுக்குவதைப் போல் வெளி உலகத்துக்கு ஒரு பேச்சும், உள்ளார்ந்த ரீதியாக அதற்கு எதிரான போக்கையும் கடைப்பிடிப்பதையே எம்மால் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

அரசின் மீது நம்பகத்தன்மை ஏற்படுவது போன்ற எத்தகைய செயற்பாடுகளையும் காணமுடியவில்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு இந்நாட்டின் சம பங்காளிகளான தமிழ்த் தேசிய இனத்தையும் இணைத்துக்கொண்டு நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழர்கள் இந்நாட்டில் வாழ்வதற்கே தகுதியற்றவர்கள் என்ற போக்கிலேயே செயற்படுகின்றனர். இலங்கை அரசின் இந்தப் போக்கை மாற்றுவதற்கு சர்வதேச சமூகம் தன்னாலான அனைத்தையும் செய்ய முன்வரவேண்டும் - என்றுள்ளது.

## கோட்டாபய கடற்படை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்து முன்னரும் பல தடவைகள் காணி உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

முன்னைய போராட்டங்களை அடுத்து மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலரின் தலைமையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவும், அதற்குக் காணி உரிமையாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர், கடற்படையினர் அழைக்கப்பட்டு கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்ற உறுதிமொழி அதிகாரி கள் தரப்பினால் வழங்கப்பட்டிருந்தது.

மக்கள் பிரதிநிதிகளை அழைக்காமல் கலந்துரையாடலை நடத்தி விட்டு அதன் முடிவைத் திணிக்க வேண்டாம் என நேற்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் உரிய முறையில் கலந்துரையாடலை நடத்தி முடிவு எடுக்கத் திரும்பவும் உறுதியளிக்கப்பட்டது.

## இறக்குமதிக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தவே இந்நடவடிக்கை எனத் தெரிவிக்கப்பட்டது.

உணவு, தைத்த ஆடை சொக்லெட், கொக்கோ அடங்கிய உணவுப் பொருள்கள், அழகு சாதனப் பொருள்கள், பதப்படுத்தப்பட்ட பால்,கைக்கடிகாரங்கள், பலவகை மின்னியல் இயந்திரங்கள் உள்ளிட்ட பல பொருள்களுக்கு இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டாபய அமெரிக்கா திரும்பினால் கைது புலம்பெயர் தமிழர் தாக்கல் செய்த வழக்கால்!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக அமெரிக்காவிற்கு திரும்ப முடியாதவாறு வழக்குகளை தாக்கல் செய்தவர் தாம் என புலம்பெயர் தமிழ் உறுப்பினர் ரோய் சமந்தனம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கா திரும்பினால் தான் தாக்கல் செய்த வழக்கு மூலம் கைது செய்யப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் உறவினர்கள் பலர் வெளிநாடுகளில் இருக்கின்றனர். அவர்கள் எவ்வாறு வெளிநாடுகளுக்கு சென்றனர் என்பது தெரியாது.

அவர்கள் எவ்வாறு வெளிநாடுகளுக்கு சென்றனர் என்பது தொடர்பில் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். பொட்டு அம்மான் உயிரிழந்துவிட்டார். விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையதாக கூறப்படும் பலர் தற்போது சிறையில் இருக்கின்றனர்.

எனினும், கே.பி.போன்றவர்கள் பாதுகாப்புடன் வெளியில் இருப்பது பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. பிள்ளையான், கருணா அம்மான் மற்றும் கே.பி. போன்றவரகளே சிங்கள மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தினர். அவர்கள் அனைவரும் அரச பாதுகாப்புடன் வெளியில் இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு அப்பால் வடக்கு கிழக்கில் பல துணை இராணுவம் செயற்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் மேல் பழியை சுமத்தி பல மோசமான செயற்பாடுகளை துணை இராணுவம் செய்திருந்தது.

இந்நிலையில், 2019 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக கலிபோர்னியா நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அமெரிக்க சட்டத்தரணிகள் மற்றும் ஜஸ்மின் சூகா ஆகியோருடன் இணைந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தோம்.

தான் இலங்கையில் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமையால் இந்த வழக்கை தாக்கல் செய்த தாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ மீளவும் அமெரிக்கா திரும்பினால் வழக்கு தொடர்பான செயற்பாடுகள் ஆரம்பமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கொழும்பில் பொருள்கள் வாங்கிவிட்டு பணம் செலுத்தாமல் தப்பி ஓடிய நபர்!

## பிள்ளைகளின் பசியே இதற்குக் காரணம்



கொழும்பு, பொரளை பிரதேசத்தில் 2 பிள்ளைகளின் தந்தை ஒருவர் 3 கிலோ கிராம் அரிசி மற்றும் சமபோஷ பக்கெட் ஒன்று என்பவற்றை வாங்கிவிட்டுப் பணம் செலுத்தாமல் தப்பிச் செல்லும் போது, பாதுகாப்பு அதிகாரிகளால் பிடிபட்டுள்ளார்.

குறித்த 27 வயதான இளைஞன் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். அவர் கூலி வேலை செய்து அன்றாடம் குடும்பத்துக்கு உணவளித்து வந்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 19 ஆம் திகதியன்று அவருக்கு எதுவித வேலையும் கிடைக்காத நிலையில் பிள்ளைகள் பசியில் வாடியுள்ளனர்.

ஒன்றும் செய்ய முடியாத நிலையில் பொரளை சதொச நிலையத்துக்குச் சென்ற நபர் 3 கிலோ கிராம் அரிசி மற்றும் சமபோஷ பக்கெட் ஒன்றை கையில் எடுத்துள்ள நிலையில் பணம் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற முயற்சித்துள்ளார். எனினும் பாதுகாப்பு பிரிவினரால் அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

பணம் செலுத்தாமல் செல்வது திருட்டு செயல் எனக் கூறிய பாதுகாப்பு பிரிவினர் பொருள்களுடன் அந்த நபரை பொரளை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த அதிகாரி ஸ்ரீயாரத்ன என்பவரிடம் சதொச பாதுகாப்பு அதிகாரி முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட அதிகாரி, குறித்த நபர் அப்பாவி என அடையாளம் கண்டுள்ளார்.

நிலைமையை அறிந்து உடனடியாக 1,000 ரூபா பணம் கொடுத்த அதிகாரி, இதனை சதொசவில் செலுத்திவிட்டு பொருள்களைக் கொண்டு செல்லுமாறு கூறியுள்ளார். இந்த சம்பவம் அங்கிருந்தவர்களை நெகிழ வைத்துள்ளது.

# பாடசாலைப் பொருள்களின் விலை உயர்வினால் மாணவர்கள் பாதிப்பு!

## பெற்றோர் விசனம்

பாடசாலைப் பொருள்களின் விலை உயர்வால் மாணவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காகிதாதிகள், மாணவர்களின் பாதணிகள் உள்ளிட்ட பொருள்களின் விலை அதிகரிப்பால் பெற்றோரால் அவற்றை கொள்வனவு செய்ய முடியாத நிலைமை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்களின் ஒரு ஜோடி பாதணிகள் 1550 ரூபாவிலிருந்து 3 ஆயிரத்து 780 ரூபாவாக உயர்வடைந்துள்ளது என பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

குளியாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த பெற்றோர் ஒருவர் தமது இரண்டு பிள்ளைகளுக்குமான பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்ய 38 ஆயிரம் ரூபா தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

10 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட பென்சில் இன்று 40 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இறப்பர் சிலிப்பர்கள் 200 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக உயர்வடைந்துள்ளதாக மற்றுமொரு பெற்றோர் தெரிவித்துள்ளார். நாள் சம்பளத்துக்கு தொழில் புரியும் தமக்கு பாதணிகள் அல்ல சிலிப்பர்களைக் கூட கொள்வனவு செய்து கொடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை காகிதாகிகள் மற்றும் ஏனைய உபகரணங்களின் விலை அதிகரிப்பால் அநேகமான பெற்றோர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைப்பதில் பெரும் சவால்களை எதிர் நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆய்வொன்றுக்காகத் தகவல்கள் திரட்டும் போதே பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் காகிததாதி கடைகளின் உரிமையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓர் இறாத்தல் பாணின் விலையை 50 ரூபாவினால் குறைக்கலாமாம்!

## வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமாயின் பாண் ஒன்றுக்கான விலையை குறைக்க முடியும் என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பாண் ஓர் இறாத்தலின் விலையை 50 ரூபாவாலும், பணிஸ் ஒன்றின் விலையை 25 ரூபாவாலும் குறைக்கமுடியும் என்று அந்த சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஏனைய வெதுப்பகப் பொருள்களின் விலையை கணிசமான அளவில் குறைத்து மக்களை நிம்மதியடையச் செய்ய முடியும் என்றும் அவர் கூறினார்.

மேலும், வெதுப்பக உற்பத்திக்குத் தேவையான பிரதான பொருள்களான மாவு, சீனி, எண்ணெய், முட்டை போன்றவற்றின் விலைகள் பெருமளவு அதிகரித்துள்ளன.

இதன் காரணமாக வெதுப்பக தொழிற்துறையை தற்போது கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பாண், பணிஸ் உள்ளிட்டவற்றை பொதுமக்கள் இப்போது கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, அரசாங்கம் மற்றும் அதனுடைய நிறுவனங்கள் உதவி வழங்குமாயின் வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியும் என அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜயவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணம் .......

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே சன்சோனி தனது மதிப்பீட்டில் அது ஒரு சிங்கள, பௌத்த விகாரையின் இடிபாடுகளில் எழுந்தது எனக் கூற வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

இவையெல்லாம் தமிழ் மக்கள் ஆதாரமாக பார்த்த கிலஹோனினது அறிக்கையை போன்று, அப்பொழுது இருந்த கோவிலை இடித்த போர்த்துக்கேய கப்பல் தளபதியின் குறிப்பேட்டில்தான் எழுந்தது. அன்று ஒரு விசாலமான தகாபாவை இடித்துத் தகர்த்ததாக அவன் குறித்திருந்தான் என்ற வாதங்கள்தான். மங்கிப் போன காலங்களில் இவை பற்றி பலவிதமாக ஆராயலாம். ஆனால் அரசியலில் தக்க நேரத்தில் அனுகூலமாக வருபவற்றைப் பற்றி பிடித்துத் தக்க வைத்துக்கொண்டு அதில் இருந்து முன்னேற வேண்டும். இவ்வளவு சர்ச்சைகளுக்கும் வாதப்பிரதிவாதங்களுக்கும் இடையில் வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ்ப் பிரதேசங்களாக ஸ்ரீலங்கா அரசு ஏற்பதற்கு கட்டுப்பட்டு, அது ஊர்ஜிதமான போது, அதனைக் கைப்பிடியாக தமிழ் மக்கள் கொண்டு நடக்க முன் வந்திருக்க வேண்டும். இந்த 35 வருட காலங்களில் அதனைச் சிதைத்து, உருக்குலைத்து, 'யாழ்ப்பாணத்தில் நீங்கள் ஆணை பெற்றதாக கருதுகிறேன்' என ஜே.ஆர். சொன்ன நிலைக்கு வர வைத்திருக்கிறார்கள்.

இவற்றில் சுவையானது ஜே.வி.பியின் விஜேவீரவுக்கு ஓரளவு இனப் பிரச்சினையில் ஆசானாக இருந்த சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சண்முகதாசனின் கூற்றுக்கள். அவற்றை நாளை பார்ப்போம்.

(வளரும்)

# இலங்கை சரியான பாதையில் பயணிக்கவில்லை அமெ. காங்கிரஸ் உறுப்பினர்கள் குற்றச்சாட்டு!

இலங்கை சரியான பாதையில் பயணிக்கவில்லை என அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர்கள், அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் அன்தனி பிளின்கன் மற்றும் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான அமெரிக்க செயலணியின் பிதானி சமந்தா பவர் ஆகியோரிடம் கோரியுள்ளனர்.

இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக இன்னமும் திருப்தி கொள்ள முடியாது எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசியல் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டுமெனக் கோரி தொடர்ந்தும் பாரியளவில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் காரணமாக ஏற்பட்டுள்ள உணவு, எரிபொருள் பற்றாக்குறை கவலையளிக்கின்றது எனவும் குறிப்பிடுகின்றனர்.

இலங்கைக்கு மேலதிக உதவிகள் வழங்கப்பட வேண்டுமென 10 காங்கிரஸ் சபை உறுப்பினர்களும் கோரியுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.08.2022இல் வெளியிடப்பெற்றது.